# பிச்சையெடுத்தலில் பங்களிப்புச் செய்யும் காரணிகள்: ஒரு சமூகவியல் ஆய்வு

கலாநிதி எஸ்.எம். அய்யூப்,
தலைவர், சமூகவியல் துறை
சமூகவியல் முதுநிலை விரிவுரையாளர், கலை கலாசார பீடம். இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
0094769643899, மின்னஞ்சல்: ayoobsm@seu.ac.lk, ayoobsm2004@gmail.com

***ஆய்வுச் சுருக்கம்***

பிச்சையெடுப்பவர்களை எல்லா சமூகங்களிலும் பரவலாக காணலாம். ஒரு சமூகத்தில் காணப்படும் சமூக பொருளாதார பிரச்சனைகளில் பிச்சையெடுத்தலும் ஒன்றாகும். தனிமனித மற்றும் சமூக ஒழுங்கின்மையின் சுட்டியாக பிச்சையெடுத்தல் காணப்படுகின்றது. பிச்சைக்காரர்களையும் அவர்களை பிச்சையெடுக்க தூண்டிய காரணிகளையும் கண்டறிவதே இவ் ஆய்வின் நோக்கம் ஆகும். அக்கரைப்பற்று தொடக்கம் மருதமுனை வரை ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் வரை (2019) பிச்சையெடுத்தவர்களை வசதி மாதிரியாக( Convenience Sampling) பயன்படுத்தி இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. ஆய்வின் முடிவில் பிச்சைக்காரர்களின் வகைகளும் அவர்களை பிச்சையெடுக்க தூண்டிய காரணிகளும் கண்டறியப்பட்டுள்ளன.

**விளக்கச் சொற்கள்**: பிச்சையெடுத்தல், சமூக ஒழுங்கின்மை, வறுமை

## அறிமுகம்

உதவியை யாசிப்பவராக அல்லது தன்மீது பிறருக்கு பரிதாபம் ஏற்படும் வகையில் ஒரு காரியத்தை செய்து அதனை மூலமாகக் கொண்டு உதவியை யாசிப்பவராக உள்ளவரே பிச்சைக்காரர்கள் என ராஓ (2002) கூறுகின்றார். தனக்காகவும்,தன்னை சேர்ந்தவர்களுக்காகவும் சாலைகளில் சுற்றித் திரிந்தோ , வீட்டுக்கு வீடு இருந்தோ யாசிப்பதை பிச்சையெடுத்தல் எனும் பதம் குறிப்பதாக வேறு சில சமூகவியலாளர்கள் சுட்டிக் காட்டுகின்றார்கள்.

யாசிப்பவர்கள் எல்லாம் பிச்சைக்காரர்கள் அல்லர். ஒருவர் பிச்சைக்காரராக கொள்ளப்படுவதற்கு பின்வரும் பண்புகளை கொண்டிருக்க வேண்டும் என ராஓ (2002) குறிப்பிடுகிறார்.

அ.கோயில்கள்,பள்ளிவாசல்கள்,ஹோட்டல்கள்,பஸ் தரிப்பிடங்கள் ,வியாபாரஸ்தலங்கள்,ரயில் நிலையங்கள் போன்ற பொது இடங்களில் கையேந்துபவராக இருக்க வேண்டும்.

ஆ.தன்னையும் தன்னை சார்ந்தோரையும் காத்துக் கொள்வதற்காக வீட்டுக்கு வீடு இடத்துக்கிடம் அலைந்து திரிந்து கையேந்துபவராக இருக்க வேண்டும்.

இ. வாழ்க்கையைக் கொண்டு செல்ல வேறு எவ்வித ஆதாரங்களும் இல்லாதிருக்க வேண்டும்

**ஆய்வு நோக்கம்**

பிச்சைக்காரர்களையும் அவர்களை பிச்சையெடுக்க தூண்டிய காரணிகளையும் கண்டறிவதே இவ் ஆய்வின் நோக்கம் ஆகும்.

**ஆய்வு முறையியல்**

அக்கரைப்பற்று தொடக்கம் மருதமுனை வரை ஏப்ரல் மாதம் முதல் செப்டம்பர் வரை (2019) பிச்சையெடுத்தவர்கள் 100 பேரை வசதி மாதிரியாக (Convenience Sampling) பயன்படுத்தி இவ் ஆய்வு மேற்கொள்ளப்பட்டது. மேலும் இவ் ஆய்வைச் செய்வதற்காக 10 நேர்காணல்கள் மூலம் முதல் நிலைத் தரவுகள் பெறப்பட்டன. புத்தகங்கள், சஞ்சிகைகள், அரச அறிக்கைகள், பிரதேச சபை விபரத் திரட்டுக்கள் போன்றவை மூலம் இரண்டாம் நிலைத் தரவுகள் பெறப்பட்டன. தரவுகள் அனைத்தும் ஆய்வாளராலும் கணனியைப் பயன்படுத்தியும் பகுப்பாய்வுக்குட்படுத்தப்பட்டு முடிவுகள் பெறப்பட்டுள்ளன.

**பெறு பேறுகளும் கலந்துரையாடல்களும்**

குறிப்பிட்ட காலப்பகுதிக்குள் செய்யப்பட்ட ஆய்வில் பின்வரும் வகைப் பிச்சைக்காரர்கள் அடையாளப்படுத்தப்பட்டார்கள்.

சமயப் பிச்சைக்காரர்கள் (Religion Beggars)

இவ் வகையினரை பரவலாக எல்லா ,இடங்களிலும் அவதானிக்கலாம். கலைந்த மற்றும் ஒழுங்கற்று வளர்ந்த தாடியையும் , மீசையையும் இவர்கள் கொண்டிருப்பர். தொடரான பிராத்தனைகளை இவர் கூறிக் கொண்டிருப்பாரகள். யாசகம் யாரிடம் கேட்கப்பட்டதோ அவர் பணம் கொடுத்து விட்டு கடந்து போகும் வரை. பணம் கொடுக்கப்படாத போது இவர்களது வாயிலிலிருந்து எதிரான பிராத்தனைகள் வெளிப்படும்.

வணிகப் பிச்சைக்காரர்கள் (The merchants)

இவர்கள் சில பொருட்களை கைகளிலே வைத்துக் கொண்டு சந்திக்கின்றவர்களை வாங்கும் படி தூண்டுவார்கள். இவர்களது தோற்றமும் வாங்கும் படி கெஞ்சும் மன்றாட்டமும் கடந்து செல்பவர்களை வாங்கத் தூண்டும். இவர்கள் வாங்கும் படி தூண்டும் பொருட்கள் பிச்சை எடுப்பதற்கான ஒரு உத்தியே தவிர பொருட்களின் பெறுமதி அங்கே பார்க்கப்படுவதில்லை. பொருட்களை வாங்கிக் கொண்டு விரும்பிய பணத்தைக் கொடுப்பார்கள் கடந்து செல்லும் மனிதர்கள். இவற்றோடு கூனி, திராய், பொன்னாங்கனி போன்றவற்றை விற்பதோடு வாங்காதவர்களிடம் பிச்சை வாங்கிக் கொண்டு செல்லும் கலவைப் பிச்சைகாரர்களும் காணப்படுகின்றார்கள்.

கோபக்கார பிச்சைக்காரர்கள் (The angry beggars)

பிச்சை எடுத்து எடுத்து அலுத்துப் போனதால் எப்போதும் கோபமாகவும் காண்பவர்களை நிந்திப்பவர்களாகவும் காணப்படுவார்கள்.அவர்கள் எதிர்பார்க்கும் தொகைப் பணம் கிடைக்காத போது சில நேரம் தூக்கி வீசிவிட்டு செல்வார்கள்.

ஊனமுற்றோர் (The handicapped)

உடம்பு ஊனப்பட்டவர்களாக அதாவது கை அல்லது கால்களை இழந்தவர்களாக, பார்வையற்றவர்களாக இவர்கள் காணப்படுவார்கள். சில பொழுதுகளில் ஊனப்பட்டவர்களாக போலியாக நடித்து பிச்சையெடுப்பவர்களும் காணப்படவே செய்கின்றார்கள்.

குழந்தைப் பிச்சைக்காரர்கள் (Child Beggars)

தெருக்களிலே கைகளை ஏந்தி ஏந்தி யாசகம் கேட்பவர்களாக இவர்கள் காணப்படுவார்கள்.பல பொழுதுகளில் பெற்றோரால் கைவிடப்பட்டவர்களாகவும் இவர்கள் காணப்படுகின்றார்கள் கிடைக்கும் பணத்தில் உணவுத் தேவையையும் மற்றும் இதர தேவைகளையும் நிறைவேற்றிக் கொள்வார்களாகவும் காணப்படுவார்கள்.

கதை சொல்லிகள் (The story tellers)

இத்தகைய பிச்சைக் காரர்கள் தமது கதையை அழகான மொழியில் முன்வைப்பார்கள். ஆங்கில அறிவு கூட இவர்களுக்கு இருக்கும் உணவுக்காக அல்லது மருத்துவத்துக்காகவே இவர்கள் இரப்பதாக கூறுவார்கள் .

குண்டர்கள் (The thugs)

பணத்தை கறப்பதற்காக மிரட்டல் மற்றும் ஆவேசத்தை ( Intimidation and aggression) வெளிப்படுத்துவார்கள். சிறு தொகைப் பணம் கொடுக்கப்படும் போது அதை உடனே வீசி விட்டு அச்சுறுத்தும் வகையில் வார்த்தைப் பிரயோகம் செய்வார்கள். பயமுறுத்துதலே இவர்களது யாசகத்தின் துரும்பாகும்.

குடும்பப் பிச்சைக்காரர்கள் (The family beggars)

இவர்கள் தம் கையில் ஒன்று அல்லது பல குழந்தைகளுடன் சில பொழுதுகளில் குடும்பத்துடன் காணப்படுவார்கள். எதிர்ப்படுபவர்கள் பணம் கொடுக்கும் வரை அல்லது தமது எல்லையை விட்டு தூரமாகும் வரை யாசித்துக் கொண்டு இருப்பார்கள். ஆடைகளைத் தொட்டும் இழுத்தும் இவர்கள் யாசகங் கேட்பார்கள்.

வயோதிபப் பிச்சைக்காரர்கள் (Elderly beggars)

உழைக்க முடியாமல் போன முதுமையில் வேறுவழியில்லாமல் யாசகத்தின் பக்கம் ஒதுங்கியவர்களாக இவர்கள் காணப்படுவார்கள். பிள்ளைகளால் கைவிடப்பட்டு பராமரிப்பு இல்லாமல் போன முதியவர்களும் இவ் வகையில் அடங்குவர்.

போலிப் பிச்சைக்காரர்கள் (Pseudo beggars)

போதியளவு பணமிருந்தும் மேலதிக வருமானத்திற்காக உழைப்பவர்களும், கள்வர்கள், பாதாள உலக கோஷ்ரிகள் போன்றோரும் இவற்றுள் அடங்குவார்கள்

மனநலம் குன்றிய பிச்சைக்காரர்கள் (Insane beggars)

ஏதோ ஒரு காரணத்தினால் மன நோய்க்கு உட்பட்டு விகாரமான தோற்றங்களில் வீதியில் உலா வந்து காண்போரை யாசகம் கேட்டு நிர்ப்பந்திப்பார்கள். தொடரான போதை வஸ்துப் பாவனை ,குடும்பங்களால் கைவிட்டமை போன்ற காரணங்கள் இவர்களது இந் நிலைக்கு காரணமாக அமையலாம். பிறவியிலே மனநலம் பாதிக்கப்பட்டவர்களும் இதில் அடங்குவார்கள்.

பரம்பரைப் பிச்சைக்காரர்கள் (Hereditary beggars)

சில பழங்குடிகளும் சில குடும்பங்களும் பிச்சையெடுத்தலை பரம்பரைத் தொழிலாக செய்கின்றார்கள்.

சான்றிதழ் பிச்சைக்காரர்கள் (Testimonial Beggars)

சமய நிறுவனங்கள் மற்றும் அரசாங்க அதிகாரிகள் போன்றோரால் உறுதிப்படுத்தப்பட்ட பத்திரங்களை எடுத்துக் கொண்டு அதனை ஆரதாரங் காட்டி இவர்கள் யாசகங் கேட்பார்கள். இவர்களது வறுமை நிலையை விளக்குவதற்காக அல்லது குறிப்பிட்ட நோயை நிவர்த்தி செய்வதற்கு பணம் தேவைப்படுவதாக அல்லது வயதான பெண் பிள்ளைக்கு திருமணம் செய்து வைக்க பணம் தேவைப்படுவதாக இவர்கள் கொண்டு வரும் ஆவணங்கள் சுட்டிக்காட்டும்.

ஆய்வுக்காக தெரிவு செய்யப்பட்ட பிச்சைக்காரர்கள் தாம் பிச்சையெடுப்பதற்காக கூறிய காரணிகளை பின்வருமாறு தொகுத்து நோக்கலாம்.

| **இல** | **பிச்சைக்காரர்களின் வகைகள்** | **வீதம் (%)** |
|---|---|---|
| 01 | எனது தேவைகளை நிறைவேற்றுவதற்கு யாரும் இல்லை | 20 |
| 02 | நான் பிச்சையெடுக்கும் படி நிர்ப்பந்திக்கப்பட்டுள்ளேன் | 10 |
| 03 | நான் படிக்கவுமில்லை, வேலை செய்யவும் தெரியாது | 05 |
| 04 | யாரிலும் தங்கியிருக்க விருப்பமில்லை. | 12 |
| 05 | எனது ஏனைய குடும்ப அங்கத்தவர்களும் இதே தொழிலையே செய்கின்றார்கள். | 04 |
| 06 | பிச்சையெடுத்து எனது குடும்பத்துக்கு உதவி செய்கிறேன் | 12 |
| 07 | எனது பெற்றோர் உயிருடன் இல்லை | 05 |
| 08 | எனது பெற்றோர் நோய்வாய்ப்பட்டிருக்கின்றார்கள் | 06 |
| 09 | யுத்தம் காரணமாகவே பிச்சையெடுக்கின்றேன் | 08 |
| 10 | எனது கணவணால் கைவிடப்பட்டேன் | 15 |
| 11 | மருத்துவ செலவுக்காக யாசிக்கிறேன் | 03 |
| **மொத்தம்** | | **100** |

மேலே குறிப்பிட்ட அட்டவணையை அவதானிக்கும் பொழுது தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவே பெரும்பாலானவர்கள் பிச்சையெடுத்தலின் பக்கம் திரும்பியிருக்கிறார்கள் (20%).

பிச்சையெடுத்தலைத் தூண்டும் அடுத்த மிக முக்கியமான காரணி கணவனால் பெண்கள் கைவிடப்படுவதாகும். பிள்ளைகளை வளர்ப்பதற்காகவும் தமது தேவைகளை நிறைவேற்றிக் கொள்வதற்காகவும் பிச்சையெடுக்கிறார்கள் (15%).

அதேபோல் குடும்பத்தின் தேவைகளை நிறைவு செய்து கொள்ளவும் கணிசமான தொகையி னர் (12%) பிச்சையெடுக்கிறார்கள். அதேபோல் யாரிலும் தங்கியிருக்காமல் சுதந்திரமாக வாழ வேண்டும் எனக் கருதியும் (12%) சிலர் பிச்சையெடுக்கின்றனர். உறவினர்களின் நிர்ப்பந்தத்திலும் (10%) சிலர் பிச்சையெடுக்கின்றனர்.

## முடிவுரையும் விதந்துரையும்

அக்கரைப் பற்று முதல் மருதமுனை வரை பிச்சைக்காரர்களை மையப்படுத்தி செய்யப்பட்ட ஆய்வில் சுமார் 13 வகையான பிச்சைக்காரர்களைம் அவர்கள் பிச்சையெடுப்பதற்கான காரணிகளையும் இவ் ஆய்வு கண்டு பிடித்திருக்கின்றது.

பிச்சைக்காரர்கள் சமூகத்தின் அவமானமாக கருதப்படுவதால் அவர்களை கட்டுப்படுத்துவதற்கு பின்வரும் கைங்கரியங்களை செய்ய முடியும்.

1. பிச்சையெடுப்பதனை தடுப்பதற்கான சட்டங்களை அதிகரித்தல்.
2. பிச்சைக்காரர்களை காப்பதற்கான புனர்வாழ்வு மையங்களை ஸ்தாபித்தல்.
3. ஆரோக்கியமுள்ளோருக்கு தொழில் வழிகாட்டல்களைச் செய்தல்.
4. வறுமையைக் குறைப்பதற்கான நடவடிக்கைகளை துரிதப்படுத்தல்.
5. குடும்ப நிறுவனத்தை பாதுகாப்பதற்காகவும், திறம்பட இயங்குவதற்காகவும் விழிப்புணர்வு நிகழ்ச்சிகளை நடத்துதல்.

## உசாத்துணை நூல்கள்


1. அய்யூப், எஸ்.எம். (2013). *சமூகவியல் அடிப்படை எண்ணக்கருக்கள்.* ஒலுவில்: சமூக விஞ்ஞானங்கள் துறை, இலங்கை தென்கிழக்குப் பல்கலைக்கழகம்.
2. Cohen, Robin & Kennedy, Paul, (2000). *Global Sociology*. London: Mac Millan.
3. Giddens Anthony. (2005). *Sociology.* Cambridge: Polity Press.
4. Haralambos M, and Heald R.M., (2004). *Sociology: Themes and Perspectives.* London: Harper Collins Publishers Limited.
5. Landis, Paul H., (1990). *Sociology: An Introduction*. Massachusetts: Ginn and Company a Xerox Education Company.
6. Oyen,E.,Miller,S.M.&Samad,S.A.,ed.Poverty A Global Review:Handbook on international poverty research.Oslo:Scandinavian University Press,1996.
7. Poris, Ralph, (1996). *Studies in the Sociology of Development*. Rotterdam: University Press.
8. Rao Sankar, (2002). *Sociology*: *Primary Principles.* New Delhi: S.Chand and Commpany Ltd.
9. Rathnapala, Nandasena, (1999). *The Beggar in Sri lanka*. Ratmalana: Sarvodayavishvalekha,